08 .02.2021

Case No.OS. 252/2013

PW.1 - சுஜாதா – பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

என் அப்பா பெயர் தாமோதரன். என் அப்பாவிற்கு 2 மகள்கள், 1 மகன். எனக்கு 2003 ல் திருமணம் நடைபெற்றது. எனது அக்காவிற்கு 1997 ல் திருமணமானது என்று நினைக்கிறேன். என் அண்ணனுக்கு 1995 ல் திருமணமானது என்று சொன்னால் அவர் திருமணம் செய்துகொண்டது எனக்கு தெரியாது. ஜெனார்த்தனின் மனைவி, மகன்கள் விலாப்பாக்கத்தில் குடியிருந்தார்கள் என்று சொன்னால் இல்லை. எங்கள் ஊரில்தான் இருந்தார். அவரது திருமணம் காதல் திருமணமா , இல்லையா என்ற விவரங்கள் எங்களுக்கு தெரியாது. அவர் இறந்த பின்னர்தான் அவர் திருமணம் செய்துகொண்டது எங்களுக்கு தெரியும். என் அண்ணனின் மனைவி வாணியம்பாடியில்தான் உள்ளார் என்று சொன்னால் சரிதான். அவர்களுக்கு 2 மகன்கள். பெயர் சரியாக ஞாபகமில்லை. என் அப்பா இறந்தபோது எங்களுக்கும், என் அண்ணனுக்கு விரோதம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். என் மூத்த சகோதரி சித்ரா திருமணமாகி தனியாக வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். நான் திருமணமாகி எனது கணவருடன் வேலூரில் வசித்து வருகிறேன். நான் திருமணமானபோது வேலூரில்தான் குடியிருந்தேன் என்று சொன்னால் இல்லை. திருமணமாகி வேலையின் நிமித்தமாக சென்னையில் குடியிருந்தோம். தற்போதுதான் இங்கு வந்தோம். என் தாயார் வசந்தா என்னுடன்தான் வசித்து வருகிறார். என் தகப்பானருக்கும், 1ம் பிரதிவாதிக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரிந்து எதுவும் இல்லை. 1ம் பிரதிவாதி விலாப்பாக்கத்தில் தான் இருக்கிறார் என்று சொன்னால் சரிதான். எங்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் தனிப்பட்ட விரோதம் இல்லை என்றால் சரிதான்.